**செய்தி வெளியீடு எண்: 034** **நாள் : 21.01.2015**

**<u>மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள் ஆகியோர் தலைமையில் கூட்டுறவுத்துறை மற்றும் உணவுத்துறை கட்டுப்பாட்டில் செயல்படும் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும், அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு மேலும் சிறப்பாக வழங்குவது குறித்தான உயர்மட்ட ஆய்வுக் கூட்டம்</u>**

*******

இன்று (21.1.2015) சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கூட்டஅரங்கில் **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்கள் ஆகியோர் தலைமையில் கூட்டுறவுத்துறை மற்றும் உணவுத்துறை கட்டுப்பாட்டில் செயல்படும் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும், அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவையினை மேலும் சிறப்பாக வழங்குவது குறித்தான உயர்மட்ட ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கூட்டுறவு மற்றும் உணவுத்துறை கீழ் செயல்படும் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் விலையில்லா அரிசி, மற்றும் பருப்பு எண்ணை போன்ற சிறப்பு பொதுவிநியோகத்திட்ட பொருட்கள் அனைத்தும் தரமானதாகவும், தங்குதடையின்றியும், சரியான அளவிலும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கிகளில் போதிய அளவு சரக்கு இருப்பு பராமரித்தல், பொது விநியோகத்திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்ட பொருட்கள் ஒரே நேரத்தில் நகர்வு செய்தல், நியாய விலைக் கடைகளில் கட்டுப்பாடற்ற பொருட்களை விற்பனை செய்ய தடை நீக்குதல் போன்றவைகள் குறித்து விரிவாக கலந்துரையாடி அரசுக்கு முன்மொழிவுகளை அனுப்புவதற்கு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர்.

மேலும், கூட்டுறவு மற்றும் உணவுத்துறை மூலம் நடத்தப்படும் அனைத்து நியாயவிலைக் கடைகளும், குறித்த நேரத்தில் திறக்கப்பட வேண்டும் என்றும், அனைத்து வேலை நாட்களிலும், அனைத்து பொருட்களையும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யவேண்டும் என்றும் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படும் கட்டுப்பாடற்ற பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு கட்டாயப்படுத்தி விற்பனை செய்யக் கூடாது என்றும், அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதை களப்பணியாளர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலர் திரு.முகம்மது நசீமுத்தின், இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல்துறை ஆணையாளர் திரு.சு.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் திரு.கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**